புதிய அவையம்

Vol. 09, Issue – 02, December - 2025

கட்டுரை பெறப்பட்டது : November - 2025 கட்டுரை ஏற்கப்பட்டது : December – 2025

# பழந்தமிழ் இலக்கியங்கள் மற்றும் கல்வெட்டுகள் வழி நீதிமுறைகள்

**முனைவர் க. மோகன்காந்தி,**

**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,**

**தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர்.**

## முன்னுரை

பழந்தமிழரின் வாழ்வியலில் நீதிமுறைகள் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். வளர்ந்த ஒரு சமூகத்தில் குற்றவியல் சார்ந்த சிக்கல்கள் ஏற்படுவது, அன்று முதல் இன்றுவரை தொடர்வதைக் காணமுடிகிறது. ஒரு நாட்டின் புறவளர்ச்சியில் பொருளாதாரம், வணிகம், பாதுகாப்பு எந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததோ, அந்த அளவிற்கு ஒரு நாட்டின் உட்கட்டமைப்பில் கல்வி, மருத்துவம், குற்றங்களைத் தடுக்கும் சட்டங்களும் அவசியம். தனிமனிதனோ அல்லது கூட்டாகவோ சேர்ந்து மக்களுக்கு துன்பத்தைத் தரும் விதத்தில் தவறுகள் இழைக்கும் போது அதைக்களைய வேண்டிய பொறுப்பு அரசுக்கு உரியது. செங்கோலைக் கையில் வைத்து ஆட்சிப்புரியும் மன்னன் மட்டுமின்றி, சிற்றூர்களில் வாழ்ந்த இனக்குழுத் தலைவர்களும் தங்கள் பகுதிகளில் நடைபெறும் குற்றங்களை விசாரித்து, தண்டனை வழங்கியுள்ள ஏராளமான செய்திகள் பழந்தமிழ் இலக்கியங்கள் மற்றும் கல்வெட்டுகளில் பதிவாகியுள்ளன.

## சங்கஇலக்கியத்தில் பெண்களுக்கு வழங்கப்பட்ட நீதிகள்

பரத்தமைப் பிரிந்த தலைமகனுக்குத் தோழி வாயில் மறுத்து, நீதிமுறை ஒன்றைக் கூறுகிறாள். கள்ளூர் எனும் ஊரிலே, அழகிய நெற்றியையுடைய இளம்பெண் ஒருத்தியின் அழகினையும் நலத்தினையும் காதல் என்ற பெயரில் களவாடினான் இளைஞன் ஒருவன். பிறகு அப்பெண்ணை நான் அறியேன் என்று பொய்யுரைத்தான். அறநெறியில் நில்லாத அவன், அவளைத் தெரியவே தெரியாது என்று சூள் (சத்தியம்) செய்தான். அப்பெண் சான்றோர் கூட்டத்தில் நீதிகேட்டு வழக்குரைத்தாள். அவையோர் நீதியின்பாற்பட்டு அவ்விளைஞனை விசாரித்தனர். அவன் கூறியது பொய்யென்பதை உணர்ந்த அச்சான்றோர் பெருமக்கள், பெரிய மரத்தின் கிளையிலே அவனைக் கட்டிப்போட்டு, அவன் தலையிலே சுண்ணாம்பு நீற்றிணை ஊற்றித் தண்டித்தனர். அப்பாடலாடிகள் வருமாறு,

"திருநுதற் குறுமக ளணிநலம் வவ்விய

அறனி லாளன் அறியே னென்ற

திறனில் வெஞ்சூ ளறிகரி கடாஅய்

முறியார் பெருங்கிளை செறியப் பற்றி

நீறுதலைப் பெய்த ஞான்றை

வீறுசா லவையத்து ஆர்ப்பினும் பெரிதே"

-அகம்.256 : 16 - 21

என்னும் இப்பாடலடிகள் வாயிலாக மதுரைக் தமிழ்க்கூடத்தனார் கடுவன் மள்ளனார் எனும் புலவர் எடுத்துரைக்கிறார்.இப்பாடலடிகள் இரண்டு முக்கியமான செய்திகளை முன்வைக்கின்றன.1. தீர குற்றத்தை ஆராய்ந்து, நேர்மையான முறையில் நீதி வழங்கிய நீதிமான்களான சான்றோர்கள் அறத்தோடு வழங்கிய தீர்ப்பு.இங்குச் சான்றோர் எவ்வித சமரசமும் இன்றி நீதிமட்டுமே குறிக்கோளாகக் கொண்டு அறவழியில் தவறிழைத்தவனை மரத்தில் கட்டிவைத்துத் தண்டித்துள்ளனர்.2. தன் கற்பிற்குப் பெரும் கலங்கம் ஏற்பட்ட காலத்திலும் எவருக்கும் அஞ்சாமல், நீதியரசர்களை நாடியுள்ள இளம் பெண்ணின் துணிச்சல். தனக்கு ஏற்பட்ட நிலைப் பிற பெண்களுக்கு ஏற்படக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு, தவறிழைப்போர் தண்டனைப் பெற்றே தீரவேண்டும், என்ற அஞ்சா நெஞ்சுரத்துடன் போராடி நீதியை நிலைநாட்டிய இச்சங்க காலத் தலைவி இன்றைய பெண்களுக்கும் முன்னோடியாய் நிற்கிறார்.

**பெண்கொலை புரிந்த நன்னன்**

சங்க இலக்கிய வரலாற்றில் நீதிதவறி, ஒரு பெண்ணைக் கொலைபுரிந்த நன்னன் என்ற மன்னன் கொடுங்கோலனாகக் கருதப்படுகிறான். வரலாற்றுப் புலவர் என்று அறியப்படும் பரணர் குறுந்தொகைப் பாடல்கள் இரண்டில் பெண்கொலைப் புரிந்த நன்னன் என்ற மன்னனைப் பாடியுள்ளார். குறுந்தொகை 292 - ஆவது பாடலில், தோழியானவள் தமிழக அரசியல் களத்தில் நிகழ்ந்த ஒரு செய்தியைக் கூறுகிறாள். நீரடாச் சென்ற இளம் பெண்ணொருத்தி ஆற்றுநீரிலே அடித்து வந்த மாங்கனியை எடுத்து உண்டுவிட்டாள். இதை அறிந்த நன்னன் என்ற குறுநில மன்னன் அப்பெண்ணை குற்றவாளியாக்கி கொல்ல ஆணையிடுகிறான். அப்பெண்ணின் சுற்றத்தார், அப்பெணாணைக் கொல்லாமல் இருக்க 91 ஆண் யானைகளையும் அவளுடைய எடை அளவுள்ள பொன்னால் செய்த பாவை(சிலை) ஒன்றையும் தருவதாக மன்னனிடத்தில் கூறுகின்றனர். நன்னன் என்னும் மன்னனோ அதை ஏற்காமல் அப்பெண்ணைக் கொன்றுவிடுகிறான். இச்செயல் கொடுங்கோன்மையின் உச்சமாகும். இதனை,

"மண்ணிய சென்ற ஒன்றுதல் அரிவை

புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு

ஒன்பதிற்று ஒன்பது களிற்றொடு அவள்நிறை

பொன்செய் பாவை கொடுப்பவும் கொள்ளர்

பெண்கொலை புரிந்த நன்னன் போல"

- குறுந். 292 : 1 - 5

என்னும் பாடலடிகள் மன்னர்களின் தவறான போக்கைப் புலவர் பெருமக்கள் வழி அறியமுடிகிறது. மேலும் மற்றொரு பாடலில் பரணரே இதற்கு கிடைத்த நீதியைப் பற்றியும் பதிவிடுகிறார். அநீதியாகத் தன் இனப்பெண்ணைக் கொன்ற நன்னன் என்ற மன்னனைப் போரிட்டு வெல்ல முடியாத சூழலில் உள்ளனர் கோசர் இனமக்கள். தன் இனப்பெண் நன்னனால் வளர்க்கப்பட்ட மாமரத்தின் கனியை உண்டதால் தானோ கொன்றான். இனி அந்த மாமரமே இருக்கக்கூடாது. இதுதான் இறந்த பெண்ணுக் வழங்கப்படும் நீதியாக இருக்க முடியும் என்று நீதியை நிலைநாட்ட ஒரு சூழ்ச்சியைச் செய்கிறார்கள். அகுதை தந்தை என்னும் குறுகிய மன்னனிடத்தில் யானைப் பரிசிலைப் பெற்று வந்த பாடிணிகளிடம், அந்த மாமரத்தில் யானைகளைக் கட்டுங்கள் என்று வேண்டினர். அவர்களும் கட்ட, யானைகள்

மரத்தை முறித்தன. பின்னர் வேரோடு மரத்தைப் பிடுங்கி எறிந்தன. இதனால் நன்னனின் மாமரம் அழிந்து போனதை,

“மகிழ்நன் மார்பே வெய்யை யானீ

அழியல் வாழி தோழி நன்னன்

நறுமா கொன்ற நாட்டிற் போக்கிய

உன்று மொழிக் கோசர் போல

வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமாற் சிறிதே”

- குறுந். 73

இப்பாடல் மிகமுக்கியமான அரசியல் குறிப்பைக் தருகிறது. நாட்டையே ஆளும் மன்னனாக இருந்தாலும் அநீதியின் வழியில் பெண்ணைக் கொன்றதால் அப்பெண்ணின் கூட்டத்தார் அரசனையே சூழ்ச்சி செய்து, வென்றனர்.அவனால் வளர்க்கப்பட்ட மரத்தை வீழ்த்தி நீதியை நிலைநாட்டியதை இங்கு உரைமுடிகிறது. இங்கு குறிப்பிடப்பட்ட கோசர் இனமக்கள் நேர்மைத்தவறாதவர்கள், உண்மைவழியில் நடப்பவர்கள் என்பதை,

“பறைபட பணிலம் ஆர்ப்ப இறைகொள்பு

தொல்மூதாலத்துப் பொதியில் தோன்றிய

நாலூர்க் கோசர் நன்மொழில் போல

வாய் ஆகின்ற தோழி”

- குறுந். 15 : 1 - 4


பழைய ஆலமரத்தின் அடியில், மக்கள், கூடும் பொதுமன்றத்தின் கண் தாம் சொன்ன சொல் பிழையாமல், நான்கு ஊர்களைச் சார்ந்த கோசர் என்ற குடியினர் வந்து தோன்றினர். அவர்களின் வாய்மொழி என்றும் பிழையாது (தப்பாது) என்று பொது மன்றத்தில் உண்மைநீதியைக் கோசர் இனமக்கள் பேசுவர் என்பதையும் இப்பாடல் உணர்த்துகிறது. கோசர் பற்றிய முந்தைய பாடல்களோடு இப்பாடலைப் பொருத்திப் பார்க்க வேண்டியது அவசியமாகும். மன்னனின் மாமரத்தில் இருந்து உதிர்ந்த மாங்கனினை உண்ட கோசர் இனப்பெண்ணை மன்னன் (நன்னன்) கொல்ல துணிகிறான். அதற்கு அறவழியில் நீதிகேட்டு கோசர் இனமக்கள் அரசனுக்குத் தண்டமாக (நஷ்ட ஈடு) 91 ஆண் யானைகளையும், அப்பெண்ணின் நிறை கொண்ட பொன்னையும் தர முன்வந்தும், அரசன் அப்பெண்ணைக்

கொன்றுவிட்டான்.எங்கள் பெண்ணிற்கு அநீதி வழங்கக் காரணமாக இருந்த மாமரத்தையே நாங்கள் வீழ்த்துவோம் என்று உறுதிப் பூண்டு, மாமரத்தை வீழ்த்தினர்.எனவே சொன்னசொல் மாறாமல் இச்செயலைச் செய்தது மட்டுமல்லாமல். பழமையான ஆலமரத்தடியில் அமர்ந்து நீதிசொல்லும் போது, கோசர்கள் வாய்மைத் தவறாதவர்களே என்பதை இப்பாடல்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன.

**தேவாரத்தில் பழையனூர் நீலி கதையில் நீதி**

பழையனூர் நீலி பற்றிய பல கதைகள் தமிழ்நாட்டு மக்களால் வழங்கப்படுகின்றன. நீலி ஒரு பேய், தன் கணவனையே கொன்றவள். காஞ்சி நகரத்தில் வாழ்ந்து வந்த அந்தணன் ஞானதீபன் என்பவனின் மகன் புவனபதி. இவனுக்கு, திருமணமாகி ஒரு குழந்தையும் இருந்தது. இவன் காசிக்கு யாத்திரைச் செல்ல தன் குழந்தையுடன் செல்கிறான். அப்போது நீலிப்பேய் அவ்வணிகனின் மனைவியைப் போல் உருமாறி வருகிறது. வந்தது தன் மனைவியல்ல என்பதை புவனபதி உணர்கிறான். ஆனால் அப்பேய் கூழாண்டார் கோத்திரத்தைச் சேர்ந்த பழையனூர் வேளாளரிடம் முறையிடுகிறது. வேளாளர் அனைவரும் சேர்ந்து வணிகன் புவனபதியைத் தன் மனைவியோடு சேர்ந்து வாழச் சொல்கின்றனர். அதற்கு அவன் மறுகிறான். இன்றிரவு நீ உன் மனைவி, குழந்தையோடு தங்க வேண்டும் என்று கூறுகின்றனர். அதற்கு புவனபதி கண்டிப்பாக நான் நாளை உயிரோடு இருக்கமாட்டேன். இந்தப்பேய் என்னைக் கொன்றுவிடும் என்று கூறியும் அவனை அப்பெண்ணோடு தங்க வைக்கின்றனர். அதற்கு மறுமொழியாக வேளாளர்கள் 70 பேரும், உன் உயிருக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் நாங்கள் 70 பேரும் உயிரைவிடுவோம் என்று கூறி அனுப்பிவைக்கின்றனர்.






**நீலி பேய் குழந்தையைக் கொன்ற இடம்**

வேளாளர் மண்டபம்



வோளர் உயிர்விட்டதை உணர்த்தும் சிற்பம்



தீயில்
இறங்கிய
வேளாளர்
பழையனூர்
கற்திட்டை



அன்றிரவு வணிகன் கூறியது போல் பேய் அவனைக் கொன்றுவிட்டது. அவனின் குழந்தையையும் கொன்றுவிட்டது. அப்பேயும் அங்கிருந்த சென்றுவிட்டது. அதனைக் கண்ட வேளாளர்கள் மனம் வருந்தினர். அவ்வணிகன் சொல்லியதைக் கேட்காத வேளாளர்கள், தங்கள் கொடுத்த வாக்கின்படி, அவ்வூர் இறைவன் சாட்சிநாதர் கோயிலுக்கு முன்பாக தீ வளர்த்து எழுபது பேரும் தீயில் குதித்துத் தம் இன்னுயிரை மாய்த்துக் கொண்டனர். கொடுத்த வாக்கிற்காக நீதி தவறாமல், வணிகனின் ஒரு உயிருக்காக எழுபது உயிர்களைக் கொடுத்து நீதியை நிலைநாட்டியுள்ளனர். வஞ்சகமாகக் கண்ணீர் சிந்தி வேளாளர்களை நம்ப வைத்த நீலியின் கதையைத் திருஞானசம்பந்தர் தம் தேவராத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

“துஞ்சவருவாருந் தொழுவிப்பாரும் வழுவிப்போய்

நெஞ்சம்புகுந் தென்னை நினைவிப்பாரு முனைநட்பாய்

வஞ்சப்படுத்தொருத்தி வாணாள்கொள்ளும் வகைகேட்

டஞ்சும்பழையனூ ராலங்காட்டெம் மடிகளே”

- திருஞானசம்பந்தர், தேவாரம் பதிகம். 45, பாடல் : 1

“பழையனூர் வேளாளர்களின் சிறப்பைக் கூறும் செப்பேடு ஒன்று திருச்சி மாவட்டம் திருவானைக்காவிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ள ஆறுநாட்டு வேளாளர் சத்திரச் செப்பேட்டில்,

வணிகனொருவன் அவனுக்பழிக்

கெழுபதுமர் வம்சத் தோன்றி

என்று வேளாளரின் பெருமை பேசப்பட்டுள்ளது. கொடுத்த வாக்கிற்காக உயிர்த்துறந்து தமிழ்நாட்டு நீதி நூல்களில் தங்களுக்கென ஓர் இடைத்தைப் பிடித்துக்கொண்ட வேளாளர்களின் உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டு 69 உருவங்கள் காணப்படுப்படுகின்றன” என்று திருவள்ளூர் மாவட்டத் தடயங்கள் என்று நூலில் நீலிக் கண்ணீரும் கூழாண்டார் கோத்திரமும் என்ற கட்டுரை வழி (ப. 63 - 64) தொல்லியல் அறிஞர் நடன. காசிநாதன் கூறுவது குறிப்பிடத்தக்கது.பழையனூரில் வரலாற்றுச் சிறப்புமிக்க கற்திட்டைகள், கற்கோடரிகள் உள்ளிட்ட ஆவணங்கள் இன்றும் உள்ளன. 70 பேர் உயிர்விட்ட இடம் இன்றும் உள்ளது என மக்களால் நம்பப்படுகிறது. அவை வழிபாட்டிலும் உள்ளன.

**கல்வெட்டுகளில் நீதிமுறைகள்**

திருப்பத்தூர் மாவட்டத்திற்குட்பட்ட சவ்வாதுமலையில் உள்ள முழலை என்னும் கிராமத்தில் இறை பொருள் அல்லது வரி வசூல் செய்யும் நீதிமுறைக் கல்வெட்டொன்றைப் புதிதாக இந்நூல் ஆசிரியர் தலைமையில் கண்டறிந்துள்ளார். சவ்வாதுமலைக்கு நவிரமலை என்று சங்ககாலம் தொட்டுப் பெயர் இருந்ததை இக்கல்வெட்டு உறுதிச்செய்கிறது.முழலைநாதர் ஆலயத்தில் 4 கல்வெட்டுகள் உள்ளன. இதில் இரண்டாவது கல்வெட்டானது வரிவசூல் செய்ய நீதிவழி அரசணையைப் பிறப்பித்த கல்வெட்டாக உள்ளது. ஆடையூர் நாட்டைச் சேர்ந்த நாடாழ்வான் திருப்பத்தூர் மாவட்டத்திற்குட்பட்ட நவிரமலை (சவ்வாதுமலை) பகுதியை ஆட்சி செய்துள்ளான். ஆடையூர் நாடு என்பது திருவண்ணாமலையைச் சுற்றியுள்ள பகுதியாகும். இன்றைக்கும் திருவண்ணாமலை அருகே ஆடையூர் என்ற கிரமம் உள்ளது. இவ்வாடையூர் நாடாழ்வான் குறுநில மன்னவான். இவனுக்கும் மேலாக ஒரு அரசு இயங்கி வந்திருக்கிறது. அத்தகைய தலைமை அரசிடம் இருந்து எழுதப்பட்ட நீதிமுறையில் வரிவசூல் செய்யும் கல்வெட்டாக இக்கல்வெட்டுள்ளது. அந்தப் பேரரசு சோழர்களாக இருந்திருக்கலாம். “நாங்கள் சொல்லும் வரியை மட்டுமே ஆடையூர் நாடாழ்வான் நவிரமலை மக்களிடம் இருந்து வரியாக வசூலிக்க வேண்டும். இதனை மீறி அதிகப்படியான வரியை வசூலித்தால், நாடாழ்வான் என்ற பட்டத்தை நாங்கள்

பறித்துவிடுவோம்” என்று அக்கல்வெட்டுக் கூறுகிறது. இக்கல்வெட்டு இன்றைய ஜி.எஸ்.டி. யைப் போன்றது. இன்றைய அரசுகள் அரசாணையை வெளியிடுவது போல், கல்வெட்டாகச் சோழ மன்னர்கள் அரசாணையை வெளியிட்டுள்ளனர்.




இக்கல்வெட்டானது நவிரமலை மக்களிடத்தில் இறை பொருள் வாங்கும் போது ஏருக்கு மூன்றும் ஆளுக்கு இரண்டும் வாங்க வேண்டும். இதை மீறி வசூலித்தால் நாடாழ்வான் பட்டம் பறிக்கப்படும் என்று கூறகிறது. மூன்று, இரண்டு என்று வரிவசூல் பொருள் பணமா? அல்லது வேறு ஏதாவது பொருளா? என்று அறியமுடியவில்லை.இது மன்னர் - மக்களிடையே இருந்த சுமூகமான உறவுநிலையை வெளிப்படுத்துகிறது. அக்கல்வெட்டு வாசகம் பின்வருமாறு

1. வானென் ஆடை

2. யூர் நாடுல் நவி

3. ரமலை நாட்டுக்கு இ

4. றை கொள்ளுமிடத்

5. து ஏருக்கு மூன்றும்

6. ஆளுக்கு இரண்டும்

7. கொள்ளக் கடவது

8. இதொழிய மாற

9. சொன்னவன் மாறச் ஆ

10. டையூர் நாடாழ்

11. வானு மல்ல…

என்று இக்கல்வெட்டு கி.பி. 11 ஆம் நூற்றாண்டு நீதிமுறை அரசாணையைக் கல்வெட்டாக வெளிப்படுத்தியுள்ளது.

**முடிவுரை**

பண்பட்டத் தமிழனம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நீதியின் வழி தீர்ப்பை வழங்கியுள்ளதை அறியலாம். சமூகத்தில் பெண் நீதிக்கேட்டு வழக்காடியுள்ளாள், நன்னன் என்ற அரசன் நீதி தவறும் போது கோசர் என்னும் இனக்குழுக் கூட்டத்தார் அவனுக்கு நீதி புகட்டியுள்ளனர். வாய்மொழிக் கதையாக வழங்கப்படும் நீலி என்ற பேய் ஒருவனைக் கொன்றதால் அதற்கு ஈடாக 70 வேளாளர்கள் தம் உயிரைவிட்டு நீதியை நிலைநாட்டியுள்ளனர். கல்வெட்டுகளின் வழி மக்களிடம் இறை (வரி) வாங்கும் போது நீதிவழிப் பெறப் படவேண்டும். இல்லை எனி வரிவசூலிப்போர் தண்டிக்கப்படுவர் உள்ளிட்ட அறவழி நின்று நீதிவழங்கிய முறைமைகள் இங்குப் பாடுபொருளாய் அமைந்துள்ளன.

**ஆய்வுக்குத் துணைநின்ற நூல்கள்**

1. சோமசுந்தனார். பொ.வே., குறுந்தொகை உரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 18, மறு அச்சு - 2007, 2017

2. திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த தேவாரப் பதிகங்கள், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 18, பதிப்பு - 1987.

3. மோகன்காந்தி. க., திருப்பத்தூர் மாவட்ட ஆவணக் களஞ்சியம், வெளியீடு, திருப்பத்தூர் மாவட்ட நிருவாகம், பதிப்பாண்டு 2022.

4. வேங்கடசாமி நாட்டார். ந.மு., வேங்கடாசலம்பிள்ளை. ரா., அகநானூறுஉரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 18, பதிப்பாண்டு 2008.